உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 03 செவ்வாய்க்கிழமை (16-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:147

# நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என்கிறார் ஜனாதிபதி

## ஆனால் ஜனநாயக வழிக்குத் திரும்பும் உறுதியோடு பிரபா பேசவரவேண்டும்

கொழும்பு,மே16

**ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கான உத்தரவாதத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை எவராவது பேச்சு மேடைக்குக் கொண்டுவந்தால் நிபந்தனையற்ற வகையில் கலந்துரையாடத் தயாராகவுள்ளேன்.**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

தற்போதைய யுத்த நிலைமை தொடர்பாக அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுக்கு விளக்குவதற்காக நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல் கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முழுமையாக முறியடிக்கக் கூடிய பலத்தை, அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் கொண்டுள்ளனர்.

வடக்கில் நடைபெறும் கடுஞ்சமருக்கு மத்தியில் துருப்புக்கள் தாக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தில் போரிட ஒவ்வொரு கட்சியும் 3000 பேரைத் திரட்டித் தரவேண்டும்

### நேற்றைய கூட்டத்தில் அனுருத்த ரத்வத்த கோரிக்கை

தற்சமயம் நடக்கும் யுத்தத்தில் போரிட ஒவ்வொரு அரசியல் கட்சியும் மூவாயிரம் இளைஞர்களைத் தரவேண்டும்.

இப்படிக் கோரிக்கை விடுத்தார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த.

யாழ்ப்பாண யுத்த நிலைமையை விளக்குவதற்காக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அனுருத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கில் தொடரும் யுத்தத்தில் படையினர் தீவிரமாகப் போராடி வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குகிறோம். போதிய இராணுவத்தினர் இல்லை என்ற குறையை நீக்க சகல அரசியல் கட்சிகளும் மூவாயிரம் பேர் வீதம் போருக்குத் தர வேண்டும்.

இப்படிக் கூறினார் அனுருத்த.

(இ-3-9)

## ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரம் யாழ். நகரில் மக்கள் நடமாட்டம்

### வங்கிகள் உட்பட சில அலுவலகங்கள் இயங்கின

யாழ்ப்பாணம்,மே16

யாழ். மாநகரசபை மற்றும் சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் அமுலில் இருந்த ஊரடங்கு நேற்றுக் காலை 9 மணி முதல் மூன்று மணி நேரம் தளர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ். நகரப் பகுதியில் மக்கள் நடமாட்டம் ஓரளவு அதிகரித்துக் காணப்பட்டது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி, வர்த்தக வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவற்றில் பணக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

பல வர்த்தக நிலையங்கள் திறக் கப்பட்டிருந்தன. அத்துடன் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் திறக்கப்பட்டு நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

நகரின் மையப்பகுதியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டது.

எனினும் மேற்படி நிலையத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடமைக்கு சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே16

ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படும் வேளைகளில் சகல அரசாங்க மற்றும் தனியார் நிறுவன உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டுமென யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. பிரதேச சபை உறுப்பினர் நேற்று நண்பகல் சுட்டுக் கொலை!

### யாழ். நகரப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மே16

வலி. தெற்குப் பிரதேச சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் சந்தனம் காண்டீபன் (வயது33) என்பவர் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் யாழ். இந்துமகளிர் கல்லூரிக்கு அருகில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருநெல்வேலிச் சந்தைக்கு இவர் சென்ற சமயம் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டு, பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது தலைப்பகுதியில்

காயங்கள் காணப்பட்டன என்றும்-

மைக்றோ பிஸ்ரல் மூலம் இவர் சுடப்பட்டதாகவும் - ஈ.பி. டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். ஆஸ்பத்திரியில் இவரது சடலம் வைக்கப்பட்டுள்ளது.

## ஷெல் தாக்குதல்களால் குடாநாடு அதிர்ந்தது!

யாழ்ப்பாணம்,மே16

யாழ். நகரை அண்டிய யுத்த முனையிலும் குடாநாட்டின் மற்றும் சில பகுதிகளிலும் நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதல்கள் காரணமாக குடாநாடு அதிர்ந்து கொண்டிருந்தது.

இரு தரப்பினரும் மாறி மாறி ஷெல், பீரங்கித் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தனர்.

நேற்று நண்பகல் குருநகர்ப் பகுதியிலும் பின்னர் மாலை யாழ். நகரப் பகுதியிலும் வீழ்ந்துவெடித்த ஷெல்கள் காரணமாக நகர மக்கள் மத்தியில் பதற்றம் காணப்பட்டது.

பின்னர் மாலை நேரம் இருபாலை, கோப்பாய்- வெளிப்பகுதிகள் ஷெல் வீச்சுக்களால் அதிர்ந்து கொண்டிருந்தன. துப்பாக்கிப் பிரயோகச் சத்தங்களும் கேட்டுக் கொண்டிருந்தன.

(இ)

## ஷெல் தாக்குதலில் நால்வர் உயிரிழப்பு!

### குருநகர்ப் பகுதியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம்,மே16

யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு அருகில் - குருநகர் சென்.றோக் சனசமூக நிலையப் பகுதியில் - வீடு ஒன்றின் மீது வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் நால்வர் உயிரிழந்தனர்; ஐவர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.35 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நால்வரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஷெல் வீழ்ந்து வெடித்த அந்த வீடும் பலத்த சேதத்துக்குள்ளானது.

உயிரிழந்தவர்கள் விவரம் வருமாறு:-

* மனுவல் புஸ்பராசா இம்மானுவல் (வயது 40)

* யாசேது ராஜ்குமார் - வயது தெரியவரவில்லை

* சூரி சின்னத்தம்பி(வயது 31)

* ஜோண்சன் சகாயன்(வயது12)

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ரெலிக்கொம் வளாகத்தில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன

யாழ்ப்பாணம்,மே16

யாழ். ரெலிக்கொம் நிறுவனத்தின் தொலைத் தொடர்பு நிலைய வளாகத்தில் நேற்று மாலை 5.45 மணியளவில் இரு ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

அவற்றில் ஒன்று வளாகத்தில் அமைந்துள்ள கோபுரத்துக்கு அருகில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது ரெலிக்கொம் நிறுவன ஊழியரான சாள்ஸ் டிக்கன்(வயது 21) என்பவர் தலையில் காயமடைந்துள்ளார்.

அதே சமயம் கொட்டடிப்பகுதியில் வீழ்ந்து வெடித்த மற்றொரு ஷெல்லினால் ஐயம்பிள்ளை உதயகலா (வயது 28) என்பவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வில்லூன்றி, ஓட்டுமடம் ஆகிய பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

(இ-3)

## யாழ்.சிறைச்சாலைக் கைதிகளை இடம் மாற்றுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.சிறைச்சாலையிலுள்ள கைதிகளை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் கைதிகளை வைத்துப் பராமரிப்பதில் சிக்கல்கள் உருவாவதாக சிறைச்சாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.சிறைச்சாலையில் பல்வேறு குற்றங்களுக்காக 35 பேரும்-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 35 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் - ஓர் இராணுவச் சிப்பாய் மூன்று இந்திய மீனவர்கள் உட்பட 15 பேரை யாழ்.சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு என்னும் இடத்தைச் சேர்ந்த ஜோ. அலெக்ஸ் வாஷிங்டன் என்பவரது தே.அடையாள அட்டை (இல.792581870V), வி.அ.அ.(இல,0905002612) மானிப்பாய்க்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் 11.05.2000 அன்று தவற விடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத்தில் ஒப்படைக்கவும். (76257)

கந்தரோடை சுன்னாகம் எனும் இடத்தைச் சேர்ந்த பஞ்சாட்சரம் சுகன்யா என்பவரது தே.அ.அ.(இல.(826451637V), வி.அ.அ.(இல.0906012730) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில்ஒப்படைத்துதவவும். (76260)

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேசி காளை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- ப.கிருஷ்ணன், 62/2இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (76152)

## புறொயிலர் கோழிகள்

புறொயிலர் கோழிகள், மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. எல்லா நாள்களிலும் (ஊரடங்கு நேரத்திலும்) பெற்றுக்கொள்ளலாம். கட்டணமின்றி சுத்தம்செய்து தரப்படும். தொடர்பு: V.S., 227,பிறவுண் றோட் (கலட்டிச் சந்திக்கு 300 யார் யாழ்.நகர் பக்கம்), யாழ்ப்பாணம். (76102)

# மக்கள் வங்கி அறிவித்தல்

*மக்கள் வங்கி ஊழியர்கள் அனைவருக்கும்*

யாழ் நகர மக்கள் வங்கிக் கிளைகளிலும், சாவகச்சேரிக் கிளையிலும் கடமை புரியும் சகல ஊழியர்களும் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரங்களில் தவறாது கடமைக்கு சமுகம் தரும்படி கேட்கப்படுகிறார்கள். அதே நேரம் ஏனைய ஊழியர்கள் வழமைபோல தத்தம் கிளைகளில் கடமைக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றார்கள்.

**பிராந்திய முகாமையாளர்**

*மக்கள் வங்கி பிராந்தியத் தலைமைக் காரியாலயம்* (C/12118)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை

## பொதுச்சபைக் கூட்டமும் தேர்தலும் - 2000

தற்போது நிகழும் சூழ்நிலை காரணமாக 21.05.2000 இல் நடைபெறவிருந்த பொதுச் சபைக் கூட்டமும் தேர்தலும் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

**கௌரவ செயலாளர்**
**இ.செ.ச. யாழ்.கிளை**

73,கண்டி வீதி, யாழ்ப்பாணம். (C/12117)

# பாடசாலைகளுக்கான கண்ணிவெடி விழிப்புணர்வு பரீட்சை விடைத்தாள் திருத்துதல்

மேற்படி பணியை தற்போது இடைநிறுத்தி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழு,**
**JRRP/UNOPS**
**ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP)**

*125, கோயில் வீதி*
*யாழ்ப்பாணம்.* (76256)

# அறிவித்தல்

## மாவடி சனசமூக நிலையம்

எமது நிலையத்தினால் 17.05.2000 இல் நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. சீட்டிழுப்புத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(76252) **நிர்வாகம்**

# சிதம்பரக் கல்லூரி வல்வெட்டித்துறை

## கணனி வகுப்புக்கள் ஆரம்பம்

வல்வை சிதம்பரக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் 19.05.2000 வெள்ளிக்கிழமை காலை 9 மணி 30 நிமிடமளவில் இக்கல்லூரியின் பழைய மாணவர் திரு.மா.நடனசிகாமணி (இளைப்பாறிய பிரதம கணக்காளர்) அவர்களினால் கணனி வகுப்புக்கள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்.

முதலாவது கணனித் தொகுதியை மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் திரு.கணேசரத்தினம் சிவகுமார் அவர்களின் குடும்பத்தினர் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அதிபர்,*
*ஆசிரியர்கள், மாணவர்கள்,*
*பழைய மாணவர் சங்கத்தினர்,*
*பாட்சாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.*

(76253)

# நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,மே16

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இன்று இடம்பெறவிருப்பதால் கொழும்பில் சிகிச்சை பெறச் செல்லவுள்ள நோயாளர்கள் இன்று காலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சமுகம் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-15-139)

# ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே16

வட.கோவை கேணியடி வைரவர் நாகதம்பிரான் கோயில் திருப்பணி நிதிக்காக கோப்பாய் கிறிஸ்தவ கலலூரி மைதானத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி ஏற்பாடாகியிருந்த இன்னிசைக் கலைவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# பருத்தித்துறை துறைமுகம் இயங்குகிறது

சுமார் ஒருவார காலமாக ஸ்தம்பிதமடைந்திருந்த பருத்தித்துறை துறைமுகம் நேற்று முதல் மீண்டும் செயற்பட ஆரம்பித்தது.

நேற்று சுமார் 50க்கும் மேற்பட்ட லொறிகள் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டன.

கப்பலில் இருந்து இறக்கப்பட்ட பொருள்கள் கோண்டாவில் களஞ்சியத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (இ-15)

# பல்கலைக்கழக ஊழியர்களுக்கு அழைப்பு

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்களை இன்று காலை 10 மணிக்கு பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்துக்கு முன் கூடுமாறு பல்கலைக் கழக ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. (இ-3)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே16

வேலணைப் பெரியபுலம் மகா கணபதி பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய ரதோற்சவம் இன்று காலை இடம்பெறவிருக்கின்றது. (இ-3)

* * *

யாழ்ப்பாணம்,மே16

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த் திருவிழா இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும். நண்பகல் அன்னதானமும் இடம்பெறும். (இ-3-9)

# விவசாய பீட புதிய பீடாதிபதி

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் புதிய பீடாதிபதியாக எஸ். இராஜதுரை தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பீடாதிபதிக்கான தேர்தலில் இவர் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். (இ-7)

# வெளிநோயாளர் பிரிவில் 75 பேர் சிகிச்சை

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று சுமார் 75க்கும் மேற்பட்ட வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற்றனர். நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்டதை அடுத்து ஆஸ்பத்திரி ஊழியர்கள் பலர் வேலைக்கு சமுகம் கொடுத்திருந்தனர் (இ-15-139)

**UNIVERSITY OF JAFFNA**
**SRILANKA**

## NOTICE

*Spcial Council Meeting*

There will be a special Council Meeting on 16.05.2000 at 10.30 a.m at the Board room of the University. All the Council members are cordially invited.

*Prof.P.Balasundarampillai*
*Vice - Chanceller* (C/12116)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 29 - 03 - 1973



உதிர்வு 02 - 04 - 2000

## செல்வி கௌரி ஆனந்தராசா

02.04.2000 அன்று சிவபதமடைந்த எமது அன்பு மகள் கௌரியின் மரணச் செய்தி அறிந்து எமது துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று 16.05.2000 எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**அப்பா, அம்மா,**
**சகோதரங்கள்.**

*இராச வீதி,*
*தோப்பு,*
*அச்சுவேலி.* (76006)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## மா.ஆனந்தராசா கௌரி

இராசவீதி, தோப்பு, அச்சுவேலியைச் சேர்ந்த செல்வி ஆனந்தராசா கௌரி அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**விஜயன்**
**குடும்பத்தினர்**

அச்சுவேலி. (76255)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் துரைராசா

வேலணையைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில்(இராமநாதபுரம்) வசித்தவருமாகிய நாகலிங்கம் துரைராசா 09.05.2000 ஆம் திகதி காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கணபதிப்பிள்ளையின் அன்பு மருமகனும் இரத்தினாம்பாளின் அன்புக் கணவரும் திருக்கேதீஸ்வரி (இந்தியா), ஜெயந்தி (லண்டன்), சசிகரன்(இந்தியா), சிவாஸ்கரன் (லண்டன்) சுதாகரன் (இந்தியா), ஆனந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அருட்சோதி, பரமேஸ்வரன், அஜந்தினி, குமுதா, திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மாமனாரும் பரமேஸ்வரி, கணேஷ், நாகேஸ்வரி, மகேஸ்வரி, பரமதேவன், சற்குருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் முத்துக்குமார், பராசக்தி, சின்னத்துரை, தளையசிங்கம், இந்திராணி, சிவஞானவதி ஆகியோரின் மைத்துனரும் மற்றும் பேரப்பிள்ளைகளும், கண்மணியின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி நாகலிங்கம் நாகம்மா
(தாய்)
சகோதரர்கள், மைத்துனர்மார்.

47,சபாபதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (76251)

## திருமதி வள்ளியம்மை செல்வரத்தினம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை செல்வரத்தினம் பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் குணேந்திரன் (பிரான்ஸ்), வசந்தி, குணசேகரம் (பிரான்ஸ்), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திராணி (பிரான்ஸ்), தர்மசேகரம், வாசுகி(பிரான்ஸ்), சற்குணதாஸ் (குணம்) ஆகியோரின் மாமியாரும் சாமினி, வாமினி, சாளினி, சுகன்யா (கூட்டுறவுப் பரிசோதகர்), சுதாகர், மலர், செல்வன், தனஞ்செயன் தர்ஷனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மசேகரம், குணம்
(மருமகன்மார்)

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (76258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காலம் எழுதும் விதி

இலங்கைப் போர் நெருக்கடி ஐ.நா.பாதுகாப்புச் சபையின் பரிசீலனைக்கு எடுக்கப்படக் கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. யாழ்ப்பாணத்தில் போர் தீவிரமடைந்துள்ளதாலும், இந்தப் போர் மேலும் உக்கிரம் அடைந்தால் குடிமக்களுக்குப் பெரும் உயிர் அழிவு ஏற்படும் என்பதாலும், போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பினருக்கும் இடையில் அதனை நிறுத்துவதில் இணக்கநிலை இதுவரை உருவாகாமையாலும் இவ்விவகாரத்தை ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் செல்வதற்கு மேற்கு நாடுகள் உத்தேசித்துள்ளதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இப்போது நடைபெறும் போருக்கு மூல காரணம் இனப்பிரச்சினை ஆகும். தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை ஜனநாயக ரீதியில் வழங்குவதற்கு நாட்டை ஆட்சி செய்து வந்த தென்னிலங்கை அரசியல் தலைமைத்துவங்கள் தவறியமையே இனப்பிரச்சினை உருவாவதற்குக் காரணம்.

1983 ஆம் ஆண்டில் தென்னிலங்கையில நடத்தப்பட்ட பெரிய அளவிலான இனப் படுகொலைகளுக்குப் பின்னர் - 17 வருடங்களுக்கு முன்னர் - இனப்பிரச்சினை வெறும் உள்நாட்டு அரசியல் விவகாரம் என்ற நிலையிலிருந்து, சர்வதேசங்களுக்கும் தெரிந்த ஒரு பிரச்சினையாக மாறியது.

எனினும் அயல் நாடு என்ற வகையில் இந்தியா மட்டுமே அவ்வேளை அதில் அதிக அக்கறை காட்டி வந்தது. ஈழத்தமிழர்களின் சகோதரர்கள் - இரத்தத்தின் இரத்தங்கள் - தமிழகத்தவர்கள் என்ற உறவினால் இந்திய அரசு இலங்கை இனப்பிரச்சினையில் அக்கறை காட்டவேண்டிய சூழ்நிலை உண்டாயிற்று.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இந்தியா மேற்கொண்ட அரசியல், இராணுவ நடவடிக்கைகள் - ஏற்பாடுகள் - தோல்வி கண்ட நிலையில் இவ்விடயம் நீறுபூத்த நெருப்பாக இருந்து மீண்டும் கனன்றது.

அதன் பின்னர், இலங்கையின் இனப்பிரச்சினை மெதுமெதுவாக சர்வதேசமயப்பட்டது. உலக நாடுகளின் சபையான ஐக்கிய நாடுகள் சபை இது விடயத்தில் அதிக அக்கறை அல்லது தலையீடு செய்யும் அளவுக்கு கிட்டவரவில்லையாயினும், இப்போது அதற்கான பின்னணியும் சூழ்நிலையும் தோன்றியுள்ளது. இது தவிர்க்க முடியாத ஒரு புதிய பரிமாணம் எனலாம்.

இந்த நிலை உருவாகியதற்கான முழுப் பொறுப்பையும் இலங்கை அரசுகளே ஏற்றுக் கொண்டாக வேண்டும். தமிழர்களின் பிறப்புரிமைகளை அங்கீகரித்து அவர்களுக்கும் ஆட்சி உரிமை உண்டு என்பதனை ஏற்றுக்கொண்டு ஆகக் குறைந்தது ஒரு கூட்டாட்சி அமைப்பு முறையையேனும் தீர்வாக நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கலாம்.

அவ்வாறன்றி, இராணுவ ஆதிக்கத்தினால், அடக்கு முறையைப் பயன்படுத்தி வெறும் சில்லறை உரிமைகளை வழங்கி நிலைமையைச் சரிசெய்யலாம் என்ற போக்குடன் இலங்கை அரசுகள் செயற்பட்டன. ஆட்சியில் அமர்ந்திருந்த கட்சிகள் தமது செயற்பாடுகளை நியாயப்படுத்தவும், அவற்றை சரிப்படுத்திவாதம் செய்யவும் முனைந்தனவே அன்றி, தமிழர்கள் சிறுபான்மையினர்களாக இருந்த போதிலும், இந்த நாட்டின் குடிமக்கள் - பிரஜைகள் - பூரண ஆட்சி உரிமையுடையவர்கள் என்ற நீதியை கண்திறந்து பார்க்க மறுத்தன.

தினை விதைத்தவனால் மட்டுமே தினையை அறுவடை செய்ய முடியும்; வினை விதைத்தவன் அதன் மூலமான வினையையே பெற நேரிடும். யாழ்ப்பாணப் போர் நெருக்கடி இனப்பிரச்சினையை ஐ.நா.அரங்கிற்கு கொண்டு சென்றுள்ளமை காலம் எழுதும் விதி எனலாம்.

# அத்தியாவசிய தேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கு செயலகம் நடவடிக்கை

## பணிகள் பன்முகப்படுத்தப்பட்டன

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.மாவட்டத்தில் மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளை வழங்கும் நோக்கில் செயலகப் பணிகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.

ஊரடங்கு அமுலில் உள்ள சமயம் நல்லூர் பிரதேச செயலகத்திலும் -

ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் யாழ். செயலகத்திலும் - செயலகப்பணிகள் இடம்பெறுவதாக அரச அதிபர் க.சண்முகநாதன் தெரிவித்தார்.

திட்டப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் கோண்டாவிலில் உள்ள உணவுக்களஞ்சியத்தில் தங்கியிருந்து உணவு விநியோகம் மற்றும் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் கொக்குவிலில் தங்கியிருந்து வலிகாமம் பகுதியில் உணவு விநியோகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

சகல பிரதேச மக்களுக்கும் உணவுப் பொருள்கள் கிடைக்க வசதியாக பணிகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன என்று செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

# மக்களுக்கான சகல பணிகளையும் தொடர்ந்து மேற்கொள்வோம்

## ஈ.பி.டி.பி அமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம்,மே16

மக்களுக்கான பணிகளைத் தொடர்ந்தும் தமது அமைப்பு மேற்கொண்டு வருகின்றது என்று ஈ.பி.டி.பி அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

அந்த அமைப்பின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

திட்டமிட்டு மக்களை இடம் பெயர வைத்து அவர்கள் சொத்துக்களைச் சூறையாடும் சமூக விரோதச் செயல்கள் யாழ்.குடாநாட்டில் இடம்பெறுகின்றன. இக்காலத்தில் மக்களை விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தற்போது நடைபெறும் யுத்தத்தைக் காரணம் காட்டி பதுக்கல் நடைபெறுகிறது. அத்தியாவசியப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், எரிபொருள் என்பன பதுக்கி வைக்கப்பட்டு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.ஆனால் யாழ்.குடா நாட்டில் ஆறு மாதங்களுக்குத் தேவையான உணவுப்பொருள்கள், எரிபொருள்கள் கைவசம் உள்ளன என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குடாநாட்டு மக்கள் பதுக்கல் வியாபாரிகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்காது நிதானத்துடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.ஷெல் வீச்சு, தாக்குதல் என்பவற்றை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி வதந்தி பரப்புவோரும் ஏற்கனவே யாழ். குடாநாட்டின் இடம்பெயர் காலங்களில் மக்களின் சொத்துக்களைச் சூறையாடியோரும் இன்று இந்த யுத்தசூழலை தமக்குச் சாதகமாக்கிச் செயற்பட ஆரம்பித்துள்ளார்கள். இந்தச் செயல்களில் ஈடுபடும் சமூகவிரோத சக்திகளுக்கு இடம்கொடாது மக்கள் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் தொடர்ந்தும் எமது மக்களுக்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். மக்கள் பணியில் ஈடுபட்டிருக்கும் வேளையில் பல உயிர் இழப்புக்கள், அச்சுறுத்தல்கள், கொலைப் பயமுறுத்தல்கள் ஆகியனவற்றின் மத்தியிலும் தொடர்ந்து மக்கள் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழலில் பல ஐயப்பாடுகளும் வதந்திகளும் எதிர்ப்பிரசார சக்திகளினால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.இதில் எதுவித உண்மையும் இல்லை.

சீர்குலைந்துள்ள யாழ். குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவையை மிக விரைவில் சீர்படுத்துவதற்கும் இடைநிறுத்தப்பட்டுள்ள குடாநாட்டுக்கான போக்குவரத்துச்சேவையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் எமது கட்சிச் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

மற்றும் குடாநாட்டின் அத்தியாவசிய தேவைகள் எதுவித இடையூறும் இன்றிக் கிடைப்பதற்கும் மருத்துவ வசதிகள் கிடைப்பதற்கும் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். தொடர்ந்தும் மக்கள் வழமைபோல் குடாநாட்டில் உள்ள எமது காரியாலயங்கள் ஊடாக எமது சேவையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது.

# பல்கலைக்கழக பேரவையின் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,மே16

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு பல்கலைக்கழக சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகத் துணைவேந்தர் அறிவித்துள்ளார். (இ-7)

# தபாலகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பணிகள்

யாழ்ப்பாணம்,மே16

யாழ். பிரதம தபாலகத்தில் நேற்று மட்டுப்படுத்தப்பட்ட அளவு பணிகள் இடம்பெற்றன.

கடந்த புதன்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுக் கப்பலில் எடுத்து வரப்பட்ட தபால்களைத் தரம் பிரிக்கும் பணியும்-

நாளை செல்லும் கப்பலில் அனுப்பவிருக்கும் தபால்களைச் சேகரிக்கும் பணியும் - நேற்று இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

# இலவச வைத்தியசேவை

மானிப்பாய் சுகாதாரச் சுற்றாடல் விவகாரசபை ஒழுங்கு செய்துள்ள இலவச வைத்திய சேவை இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மானிப்பாய் மெடிக் கிளினிக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மனநோய், இரத்த அழுத்தம் ஆகிய நோய்களுக்கான சிகிச்சைகளும் மற்றும் வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-90)

# மந்திகைக்கு மருந்து

யாழ்.மாவட்டச் சுகாதார சேவைகள் பிரிவால் மத்திய மருந்துக்களஞ்சியத்திலிருந்து நேற்று மந்திகை ஆஸ்பத்திரிக்கு மருந்து வகைகள் அனுப்பிவைக்கப்பட்டன.

தற்காலிகமாக தெல்லிப்பழையில் இயங்கும் மருந்துக் களஞ்சியத்தில் இருந்தே இந்த மருந்து வகைகள் லொறி மூலம் எடுத்து வரப்பட்டன. (இ-15)

# வீர விதான இயக்கத்துக்கு ஜேர்மன் நகரில் கிளை

கொழும்பு,மே16

ஜேர்மனியின் போலின் நகரில் வீரவிதான இயக்கத்தின் கிளை அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது.

பேர்லினில் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் முன்பு 'இலங்கைச்சிங்களவா சங்கம்' என்ற ஒன்றை நடத்தி வந்தனர். இதிலுள்ளவர்கள் பலர் ஒன்று சேர்ந்தே தற்போது சிங்கள வீரவிதான இயக்கத்தை பேர்லினில் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் தலைவராக கோகில குணவர்த்தன என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

"இலங்கையில் சிங்கள இனம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது. எனவே பிற நாடுகளில் வாழும் எமது இனத்தவரை ஒன்று திரட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது" என்று கோகில குணவர்த்தன தெரிவித்துள்ளார். (இ-ஒ)

# கல்வியியற் கல்லூரி நாளை முதல் மருதனார்மடத்தில் இயங்கும்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நாளை முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்க இருப்பதாக, கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்தார்.

விடுதி வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் மாணவர்கள் தங்க வேண்டிய ஏற்பாடுகளுடன் வருமாறும் அவர் கேட்டுள்ளார்.

விரிவுரைகளும் அன்றைய தினமே ஆரம்பிக்கும் என்றும் அவர் சொன்னார்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கல்வியியற் கல்லூரி இயங்கிவந்தது. தற்போதைய சூழ்நிலை காரணமாக அது செயலிழந்தது தெரிந்ததே. (இ-3)

## புலிகள் மீதான தடை நீடிப்புக்கு ஆதரவு இல்லை:

# தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கொள்கைக்கு உட்பட்டு நடப்போம்

## கோபாலசாமி கூறுகிறார்

புதுடில்லி,மே16

இந்தியாவில் விடுதலைப் புலிகள் மேலான தடையை நீக்க வேண்டும் என்பதே ம.தி.மு.கவின் நிலைப்பாடு என்றும் -

ஆனால் அதேசமயம் தேசிய ஜனநாயக கூட்டணியின் கொள்கைக்கு உட்பட்டு ம.தி.மு.க. நடந்து கொள்ளும் என்றும் -ம.தி.மு.க.பொதுச் செயளாளர் வை.கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் கட்சியின் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

விடுதலைப் புலிகள் தரப்பு நியாயத்தைத் தாம் தொடர்ந்து எடுத்துரைக்கப் போவதாகவும்-

இதனால் தாம் அழிந்தாலும் பரவாயில்லை என்றும்- அவர் கூறினார்.

இலங்கையின் இறையாண்மைக்குப் பங்கம் வரக்கூடாது என்பதில் இந்தியாவின் கருத்தை உணர்ந்து தாம் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-9)

# திருமுறைப் பெருவிழா இம்முறை இடம்பெறாது

## எனினும் நாளை விசேட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே16

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் வைகாசிப் பூரணை தினத்தில் நடத்தி வரும் திருமுறைப் பெருவிழா இம்முறை தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நாளை காலை 9 மணி முதல் கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் உள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

பன்னிருதிருமுறைகளுக்கு சோடசோபசார பூசை, திருமுறை அர்ச்சனை, திருமுறைப் பாராயணம், அகத்தியர் தேவாரத்திரட்டு, முற்றோதல் ஆகிய நிகழ்ச்சிகள் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கின்றன. (இ-3)

# நல்லூர் ப.நோ.கூ.ச கிளைகள் இடமாற்றம்

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த நிலையை அடுத்து நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சில கிளைகள் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கோப்பாய் - இராஜ வீதியில் இயங்கிய கிளை இல.15 கொக்குவில் கிழக்கிலுள்ள இல.16 ஆம் கிளைக்கும் திருநெல்வேலி முடமாவடியில் இயங்கிய கிளை இல.25 மற்றும் சட்டநாதர் கோவிலடியில் இயங்கிய கிளைஇல.25ஏ ஆகியவை கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள தனியார் கட்டடத்துக்கும்-

கல்வியங்காட்டில் இயங்கிய இல.1 பி கிளை மற்றும் நாயன்மார் கட்டில் இயங்கிய இல.1ஏ கிளை ஆகியன கொக்குவில் கோணாவளை ஒழுங்கையில் உள்ள தனியார் கட்டடத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

திருநெல்வேலி [illegible] வீதியில் இயங்கிய இல.2/1 கிளை சங்கத்தின் [illegible] காரியாலயத்தில் இயங்கும் இல.2 ஆம் கிளையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைகாசிப் பெருவிழா

யாழ்ப்பாணம்,மே16

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த வைகாசிப் பெருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கின்றது.

பேரவைத் தலைவர் சி.நாகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் சி.முருகேசம்பிள்ளை சிறப்புரை நிகழ்த்துவார்.

'கந்தவேள் கருணை' என்னும் தலைப்பில் இரா.செல்வவடிவேலும்-

'சண் தம்பிக்கு முந்தை என் தம்பி' என்னும் தலைப்பில் சைவப் புலவர் சித்தாந்த பண்டிதர் கீழ்க்கரவை நவமும்-சொற்பொழிவாற்றுவர்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்வும் இடம்பெறும். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர்கள், தாதிகள் இன்றி தீவக வைத்தியசாலைகள்

யாழ்ப்பாணம்,மே16

தீவுப்பகுதி வைத்தியசாலைகளில் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர்கள், தாதியர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பியதை அடுத்து தீவுப்பகுதியில் உள்ள மக்கள் வைத்திய வசதிகளைப் பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அனலைதீவு, எழுவைதீவு, மற்றும் நயினாதீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாத நிலையில் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனராம்.

யாழ்ப்பாணத்துக்கும் தீவுப்பகுதிக்கும் இடையிலான பண்ணைப் பாலத்தின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் மேற்படி நோயாளர்கள் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. (இ-7)

# இடம்பெயர்ந்த குடும்பங்களை ஈ.பி.டி.பி. குழுவினர் சந்தித்தனர்

யாழ்ப்பாணம்,மே16

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இடம்பெயர்ந்து நல்லூர்ப் பிரதேசசபைப் பிரிவிலுள்ள ஏழு பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களை ஈ.பி.டி.பி. அமைப்பின் குழுவொன்று நேற்றுச் சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்து கொண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயம், திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம் மற்றும் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், நாமகள் வித்தியாலயம், திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவையே இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள ஏழு பாடசாலைகளும் ஆகும்.

நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன், வலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தலைவர் ந. திரிலோகநாதன் ஆகியோர் இவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

நல்லூர் பிரதேசசபையின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவிகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# தணிக்கைக்கு ஆதரவாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு,மே16

யுத்தச் செய்திகளை வெளியிடுவதற்கு அரசு அமுல் செய்துள்ள தணிக்கை, அடிப்படை உரிமைகளை மீறவில்லை என்று உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியது.

தணிக்கையை ரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி பல அரச சார்பற்ற நிறுவனங்களின் சார்பில் சுனிலா அபயசேகரா தாக்கல் செய்த மனு மீதே இந்தத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

நீதியரசர்களான ரஞ்சித் அமரசிங்க, எஸ்.வி.யே.வி. வடுகொடபிட்டிய, லஷ்மன் வீரசேகர ஆகியோர் இந்த மனுவை விசாரித்துத் தீர்ப்பு வழங்கினர். (இ-3-6)

## நிபந்தனை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குதல்களை முறியடித்து வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் உதவிகளையும் அரசாங்கம் தாராளமாக உதவி வருகின்றது. இதன் காரணமாக படையினர் உற்சாகத்துடன் போராடி வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் யுத்தத்தை நிறுத்தத் தயாராக இருந்தால் அவர்களுடன் பேச அரசாங்கம் தயாராக இருக்கின்றது. ஆனால் வடக்கில் இருந்து துருப்புக்கள் வாபஸ் பெறப்படவேண்டும் என்பது போன்ற ஏற்றுக் கொள்ளமுடியாத யோசனைகளுக்கு அரசு ஒருபோதும் இணங்கமாட்டாது.

சமாதானச் சூழ்நிலையில் வாழ முடியாது என்று விடுதலைப் புலிகள் உணர்ந்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.தே.க., பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் முன்வைத்த வாய்ப்புக்களை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தவிர்த்து வந்தார்.

ஜனநாயக நடைமுறையில் இணைந்து கொள்வதற்கான உத்தரவாதத்தோடு பிரபாகரனை எவராவது பேச்சு மேடைக்குக் கொண்டுவர தயாராகவிருந்தால் நிபந்தனையற்ற கலந்துரையாடலுக்கு தயாராக உள்ளேன். அதனை வரவேற்கின்றேன்.

சிறுபான்மையினரின் உரிமைகள் வழங்கப்படுவது சரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டால் சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளுக்கு எந்தவிதமான உதவிகளையும் வழங்கமாட்டாது - என்றார் ஜனாதிபதி.(இ-3-9)

## கடமைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக யாழ். செயலகம், நல்லூர், சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகங்கள், வங்கிகள், மின்சாரசபை, கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள், உணவு மற்றும் சுகாதாரத் திணைக்களங்கள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் உட்பட -

காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங்களில் பணிபுரிவோர், தபால், ரெலிக்கொம் நிறுவன ஊழியர்கள் அனைவரும் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு விசேட பாஸ் வழங்கப்பட்டுள்ளது எனவும் -

அவர்கள் அதனைக் காண்பித்து ஊரடங்கு அமுலில் உள்ள வேளையிலும் கடமைக்குச் சமுகமளிக்க முடியும் எனவும் - மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-7)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோல் பெறுவதற்காக நீண்ட நேரம் மோட்டார் சைக்கிள்களுடன் வரிசையில் ஏராளமானோர் காத்து நின்றனர். இவர்களில் பலர் பெற்றோல் கிடையாது ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதையும் காணக் கூடியதாக இருந்தது.

இதே வேளை யாழ்.அரச செயலகத்துக்கு உத்தியோகத்தர்கள் சிலர் சமுகமளித்திருந்தனர் எனவும் - உள்ளக வேலைகள் சில இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-4-10-51-15)


**NEW SCIENCE HALL**

**JAFFNA**

மேற்படி நிறுவனத்தில் நடைபெற்ற வகுப்புக்கள் யாவும் தற்காலிகமாக 18.05.2000 முதல் கோண்டாவில் ஈசன் கல்வி நிலையத்திலும் வட்டுக்கோட்டை (மாவடி) NEW SCIENCE HALL இலும் நடைபெறும்.

(76153) நிர்வாகி


## கண்ணிவெடித் தாக்குதலில் அமைச்சர் பலி!

புதுடில்லி,மே16

காஷ்மீரில் நேற்று இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் மாநில மின்துறை அமைச்சர் புலாம் ஹஸன் சின்பத் உட்பட ஐவர் உயிரிழந்தனர்.

அமைச்சரும் அவரது பாது காவலர்களும் கார் ஒன்றில் சென்று கொண்டிருந்த சமயம் இந்தக் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது. கண்ணி வெடித் தாக்குதலின் போது கார் துண்டு துண்டாகச் சிதறியது. (இ-7)

## மதுபானகடைகள் 2 நாள்கள் மூடப்படும்

கொழும்பு,மே16

வெசாக் தினத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள சகல மதுபானக் கடைகளும் நாளையும் நாளை மறுதினமும் மூடப்பட்டிருக்கும் என்று கலால் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-9)

## தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு,மே16

நாட்டில் தற்சமயம் நிலவும் நெருக்கடி நிலைமை குறித்து தொழிற்சங்கப்பிரதிநிதிகளுக்கு விளக்குவதற்கான கூட்டம் ஒன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இன்று அலரிமாளிகையில் நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்துக்கு அரசு சார்புத் தொழிற்சங்கங்களுக்கு மட்டுமல்லாது எதிரணித் தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார். (இ-3-6)

## திருமலை பொலிஸ் நிலை மீது தாக்குதல்

கொழும்பு,மே16

திருகோணமலை பூவரசன் வீதியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் மீது நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பொலிஸார் உயிரிழந்தனர். ஐந்து பொலிஸார் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-3-6)

## ஷெல் தாக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

சிகிச்சை பெறுவோர் விவரம் வருமாறு:-

* விஜயன் றொபேட்(வயது 29)
* அன்ரனி குயின் - வயது தெரியவரவில்லை
* யேசுதாஸன் அமலதாஸ் (வயது 24)
* யோன்பிள்ளை அன்ரன் (வயது 39)
* ஜெயசீலன் நேவின்(வயது 16)
* அலோசியஸ் ஆஷா (வயது 13)
* பி.யோகேஸ்வரன் (வயது23)

## யாழ்.சிறைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பாயை எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு பிரதம நீதிவான் முன் ஆஜராகும்படி உத்தரவிட்ட நீதிவான் 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார். மூன்று இந்திய மீனவர்களையும் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் அவர்களை காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

ஏனையோர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அதேநேரம் - மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளின்று ஆஜர் செய்யப்பட்ட 7 பேரை பிணையில் செல்ல நீதிவான் சு.ப. சுப்பிரமணியம் அனுமதித்தார். (இ-3-109)


**நிரு கல்வி நிலையம்**

கோண்டாவில்.

எமது நிறுவனத்தில் சகல வகுப்புக்களும் 15-05-2000 திங்கள் முதல் ஆரம்பமாகிவிட்டதை [illegible] றோம்.

(76254)


# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நேற்று பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம்,மே16

கடந்த புதன்கிழமை முதல் தடைப்பட்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பமாகின.

கொக்குவில் சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பஸ் நிலையத்தில் இருந்து வலிகாமம் பகுதிக்கான பஸ் சேவைகள் இடம்பெற்றன.

ஊரடங்கு நடைமுறையில் இல்லாத பகுதிகளில் மட்டும் பஸ் சேவைகள் இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் யாழ். மாநகரசபைப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணிமுதல் மூன்று மணி நேரம் ஊரடங்கு தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து பஸ் சேவைகள் யாழ். பஸ் நிலையப் பகுதி வரை இடம்பெற்றன.

பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த பஸ்களும் யாழ். பஸ் நிலையம் வரை நேற்று சேவையில் ஈடுபட்டன.

எனினும் குறைந்த எண்ணிக்கையான பொதுமக்களே பஸ்களில் பயணம் செய்தனர். (இ-7-4-51-10-173-15)

# பிக்கப் வாகனம், தனியார் பஸ் மட்டக்களப்பில் கடத்தப்பட்டன

மட்டக்களப்பில் வந்தாறுமூலை சமூக சேவைகள் நிலையத்துக்கு அருகே பிக்கப் வாகனம் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

கடத்தப்பட்ட பிக்கப் வாகனம் செங்கலடி பிரதேச செயலகத்துக்குச் சொந்தமானது. இதில் பிரதேச செயலாளர்கள் கே.மகேசன், எஸ். புண்ணியமூர்த்தி ஆகியோர் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இறக்கிவிடப்பட்டு, பிக்கப் வாகனம் கடத்தப்பட்டது.

கடத்தப்பட்ட தனியார் பஸ் மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்குச் சென்று கொண்டிருந்தது. பஸ்ஸில் இருந்த 30 பயணிகளும் இறக்கி விடப்பட்ட பின்னரே பஸ் கடத்தப்பட்டது. (இ-6)

# பிரதிப் பொதுமுகாமையாளர் அலுவலகம் சுன்னாகம் மின்நிலையத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,மே16

யாழ். நகரில் இயங்கிவந்த, மின்சாரசபையின் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் சுன்னாகம் மின் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக அந்தச் சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்விநியோகம் பாதிக்கப்பட்டிருந்த நல்லூர், கனகரத்தினம் வீதிப் பகுதிகளுக்கான மின்விநியோகம் நேற்றுச் சீராக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.

அரியாலை, கைதடி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கும் வயர்கள் பழுதடைந்து விட்டன என்றும்-

அந்தப் பகுதிகளுக்குச் சென்று திருத்த வேலைகள் செய்ய முடியாதுள்ளது என்றும்-

மின்சாரசபை பலாலிக்கு மின் விநியோகம் செய்வதாக வெளிநாட்டு நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது என்றும் -

அதில் எதுவித உண்மையும் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார். (இ-3)


கொக்குவிலில்

**'உதயன்'**

**விளம்பர கருமபீடம்**

தற்போதைய நெருக்கடி நிலையைக் கருத்திற் கொண்டு வலிகாமம் பகுதி விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள் போன்றோரின் நலன்கருதி கொக்குவிலில் 'உதயன்' விளம்பரக் கருமபீடம் ஒன்று தற்காலிகமாகத் திறக்கப்பட்டுள்ளது.

தினசரி காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை விளம்பரங்கள், செய்திகள் இந்தக் கருமபீடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

**உதயன் ~ விளம்பர கருமபீடம்**

**கணேசன் கொம்யூனிகேசன்ஸ்**

கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி.

தொலைபேசி:- 2585 பக்ஸ்:- 3423


## மரண அறிவித்தல்

### திருமதி ஞானேஸ்வரி சிவராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அச்சுவேலி தெற்கு, நாவலம்பதியைச் சேர்ந்த திருமதி ஞானேஸ்வரி சிவராஜா(ஓய்வுபெற்ற ஆசிரியை, அச்சுவேலி மகாவித்தியாலயம்) நேற்று (15.05.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பொ.சிவராஜாவின் அன்பு மனைவியும் ரஞ்சித்தின் பாமிகு தாயாரும் இராசதுரை, செல்வராஜா, சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, குணராசா ஆகியோரின் சகோதரியும் இராசமணி, இராசாத்தி காலஞ்சென்ற மாசிலாமணி, கணபதிப்பிள்ளை, இரத்தினம், செல்லத்துரை, தங்கராசா, மனோன்மணி சிரோன்மணி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி தெற்கு முளக்கன் மயானத்தில் இன்று (16.05.2000) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

சிவராஜா ரஞ்சித் (மகன்)

யோகநாதன் ரஞ்சினிதேவி (பெறாமகள்)

நாவலம்பதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(C/12120)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org